மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஹையர் செகன்டரி பள்ளிகளைப் பொறுத்தமட்டில் ரூ. 25,000 அவர்களே வசூலிக்கக் கூடாது என்பதுதான் அரசின் கொள்கை. அதனை பெற்றோர்-ஆசிரியர் சங்கம் வசூலிக்க வேண்டும். பெற்றோர்-ஆசிரியர் சங்கம் வசூலிக்கிறபோது இந்தக் குறை பாட்டிற்கு இடம் இல்லை.

கிராமப் புறங்களில் வீடு கட்டக் கடன்கள்.

*வினா எண். 723—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கிராமப் புறங்களில் வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தற்போது வழங்கப்படும் கடன் தொகையினை ரூ. 10,000 ஆக உயர்த்திக் கொடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :—

* விவர அறிக்கை அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராமப் புறங்களில செல்கிற நேரத்தில் கிராமப் புறங்களில் உள்ள அத்தனை பேருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்து வருவதன் காரணமாக, ஆயிரக்கணக்கான மனுக்கள் எங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு வந்து கொண்டு இருக்கிறது. அந்த அளவிற்குக் கொடுக்க நிதி நிலைமை இல்லை. அப்படி வந்துள்ள மனுக்கள் பரிசீலிக்கப்படுமா ? அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள் ? தெளிவாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இரகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 60 கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, ரூ. 3000, ரூ. 4000 என்று கொடுத்து திட்டம் அமைத்துக் கொடுக்கிறோம். அதை ரூ. 10,000-க்கு உயர்த்துவதற்கு இல்லை. நான் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம், அதை விட இவ்வளவு அதிகமாக இருக்கிறது என்று பிற்பகல் 3 மணிக்கு நீங்கள் பாராட்டும் வகையில் நிலைமைகள் இருக்கும் என்பதை இப்போதே சொல்லிக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-10]

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, கிராமப் புறங்களில் வீடு கட்டும் கூட்டுரவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப் படுகிற கடன் தொகைகளைப் பெறுவதில் மிகவும் காலதாமதம்

---

*[—138..ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற் றுள்ளது].

1979 ஏப்ரல் 19]

ஏற்படுகிறது. இந்தக் குறையைப் போக்குகின்ற அளவில் தரப் படுகின்ற தொகையை காலதாமதம் செய்யாமல் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்ய அரசு முன் வருமா

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அவ்வாறு காலதாமதம் ஆனது உண்மை. ஏற்கெனவே 10 வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் தான் இருந்தன. அவை களை மேலும் 60 ஆக ஆக்குவதில காலதாமதம் ஆனதால்தான் கடனை வழங்குவதில் காலதாமதம் ஆகி இருக்கிறது. ஆகவே, அந்த மாதிரி காலதாமதம் ஏற்படுவதை எல்லாம் தவிர்ப்பதற்கு என்ன செய்திருக்கிறோம் என்பதை எல்லாம் நீங்கள் ஆவலோடு கேட்க இருக்கிறீர்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, வீடு கட்டுவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கப் படுகின்ற கடன்களை 2, 3 தவணைகளாகத் தருகிறார்கள். ஒவ்வொரு தவணைக்கும் சென்னைக்கு வர வேண்டி இருக்கிறது. ஆகவே, அதனால் காலதாமதம் ஆகிறது. முதல் தவணைக்கு மட்டும் சென்னைக்கு வந்து அதன் பிறகு மீதித் தவணைகளை அங்கங்கேயே வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே அது பற்றி எல்லாம் தான் நான் மதியம் 3 மணிக்குச் சொல்ல இருக்கிறேன். ஆகவே, அந்தச் செய்தியைக் கேட்பதற்கு அவர் ஸ்வீட் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, கிராமப் புறங்களில் வீடு கட்டுவதற்கு கடன்கள் வழங்கப்படுகிற போது கிராமப் புறங்களில் இருக்கின்ற நிலங்கள் ஒரே சர்வே நம்பரில் இருக்கின்ற காரணத்தால் வழங்கப்படுகின்ற கடன்கள் சரியாகக் கொடுப்பதில்லை. அதனால் பழமையான நிலை யிலே இருக்கின்ற கிராமங்களில் எல்லாம் ஒரே சர்வே நம்பர் எண் இருக்கின்ற காரணத்தால் 5 செண்டுகள், 10 செண்டுகள் என்று நிலங்கள் இருக்கின்றவர்கள் நிலையில் மனுச் செய்தால் அவர்களுக்கு வீடு கட்டுகிற வசதியை அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவ ரவர்களே, அரசு இது பற்றி பரிசீலிக்கும்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, இன்றைக்குக் கொடுக்கப்படுகின்ற கடன் மிகவும் குறைந்தது என்பதை அமைச்சரவர்களும் அறிவார்கள். இந்த தொகை எப்போதோ நிர்ணயிக்கப்பட்டது. இப்போது பொருளின் விலை உயர்ந் திருக்கிறது. ஆகவே இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற தொகையை மேலும் அதிகப்படியாக 10 ஆயிரம் என்ற அளவிற்கு உயர்த்த முடியவில்லை என்றாலும் இன்றைக்கு இருக்கக் கூடிய

தொகையை குறைந்தது 5 ஆயிரம் அல்லது 6 ஆயிரம் என்ற அளவிற்காவது உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? பல விவரங்கள் பிறகு அறிவிக்கப்படும் என்றும் ஸ்வீட் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள் எனறும் சொன்னார்கள். இந்தத் தொகையை உயர்த்திக் கொடுத்தால் நாங்கள் ஸ்வீட் வாங்கித் கொடுப்பதற்குத்தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, கிராமப் புற வீட்டுவசதி சங்கத்தின் மூலமாக கடன்கள் தருவது என்ற முறை, ஏற்கெனவே கிராமப் புற வீட்டு வசதிச் சங்கங்களில் இருக்கின்றன. அவைகள் மூலமாகத் தருவது ஒன்று. அபெக்ஸ் சொசைட்டியில் கொடுத்து அதன் பிறகு பிரைமரி சொசைட்டி களின் மூலமாக கொடுக்கப்பட இருக்கின்றது. இவைகளை எல்லாம் அறிவித்து மேலும் என்னென்ன கொடுக்கப் போகி றோம் என்பதை விளக்கி மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளிக்கின்றபோது சொல்கிறேன்.

திரு. போ. கோபாலன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் நீலகிரி மாவட்டத்திற்கு ஒரே ஒரு வீடுதான் கட்டப்பட்டிருக்கிறது என்பது தெரிய வருகிறது. இது அநியாயம் இல்லையா? அந்த இடம் என்ன பாவம் செய்தது? ஆகவே மேலும் அதிகமான அளவிலே அங்கே உள்ள மக்களுக்கு வீடு கட்டித்தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நிதியாதாரங்களை வைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதிகமாக வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது நியாயமான கோரிக்கை. ஆகவே, உண்மையாகவே அது பரிசீலிக்கப்படும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 3 மணிக்குச் சொல்வதாகச் சொல்கிறார்கள். 3 மணி வரையில் இங்கே உட்கார வைப்பது என்பது மிகச் சிரமமாக இருக்கும். மேலும் ஒரு முக்கியமான பிரச்சினை. அதாவது ஒரே காலனியாக, பத்து, பதினைந்து வீடுகள் என்று சேர்த்துக் கட்டினால்தான் கடன் கொடுப்போம் என்று சொல் கின்ற நிலை இருக்கின்றது. அப்படி என்றால் இந்தத் திட் டத்தைச்செயல்படுத்தவே முடியாது. ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக எங்கெங்கோ இடம் இருக்கும். ஆகவே அந்தத் திட்டத்தைத் தயவு செய்து கைவிட்டுவிட்டு, இன்றைய தினம் தமிழ்நாட்டிலே. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது துணைக் கேள்வியா? துணைக் கேள்வியைச் சுருக்கமாகப் போட வேண்டும். விளக்கம் கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, ஆகவே மீண்டும் பழைய திட்டத்தை அமல் படுத்தி அதாவது தனித்தனியாக

வீடுகள் கட்டுவதற்குக் கடன் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுக்க வேண்டியது மிக முக்கியமானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவனந்தம் : தலைவரவர்களே, கேள்வியே கிராமப் புறங்களில் தனித்தனி வீடுகள் கட்டுவது பற்றித்தான்.

கன்னியாகுமரி மாவட்டத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம்.

*வினா எண். 724— திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

குமரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சர் கூலி அமுலாக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

ஆம்.

திரு. தே. ஞானசிகாமணி பேரவைத் தலைவர் அவர்களே அங்கே இருக்கிற தேயிலைத் தோட்டங்களில் காரைமடை, பால்மோர், தேவகிரி ஆகிய தோட்டங்களில் டெண்டர் ரூ. 3.50 சம்பளம் கொடுக்கப்படுகிறது. அது மட்டுமல்ல. அங்கே பிளாண்ட்டேஷன் லேபர் ஆக்ட் அமுலாக்கப்படுவதில்லை. ஆகவே இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே குறைந்த பட்ச சம்பளம் 18—11—76ல் கெஜட்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. 1—12—76 முதல் அதுஅமுலில் வந்திருக்கிறது. அதை செயல் படுத்துவதில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் அதைச் செயல்படுத்துவதில் தவறு செய்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்.—பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் பதில் தரும் போது குறைந்த பட்சம் சம்பளம் அமுலில் இருப்பதாகச் சொன்னார்கள். குறைந்த பட்சம் சம்பளம் எவ்வளவு? அந்தக் கூலி எல்லாத் தோட்டங்களிலும் கொடுக்கப்படுகிறதா? கொடுக்கப்படாத தோட்டங்கள் பற்றி புகார்கள் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?